# மாகாணக் கல்வித் திணைக்களம்

# வடமாகாணம்

**பயிற்சிப் பரீட்சை - ஏப்ரல் 2018**

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான வழிகாட்டல்.

## வினாத்தாள் - II

**4**

1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண் ......................................................

பரீட்சைக்குத் தோற்றும் உங்களுக்குரிய அறிவுறுத்தல்கள்.

- ✸ உங்கள் சுட்டெண்ணை மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுங்கள்.
- ✸ மூன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும், உங்கள் சுட்டெண்ணை எழுதுக.
- ✸ எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ் வினாத்தாளிலேயே எழுதுக.
- ✸ நான்கு விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.
- ✸ விடைகள் எழுதப்பட வேண்டிய வினாக்களின் விடைகளைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

## விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்ற புள்ளிகள் |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்தம் | |
| இறுதிப்புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| எழுத்தில் | |

| | பெயரும் ஒப்பமும் |
|---|---|
| முதலாவது பரீட்சகர் (வகுப்பாசிரியர்) புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகின்றேன் | ........................................ பெயர் ........................................ ஒப்பம் |
| இரண்டாவது பரீட்சகர் (......................................) முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகின்றேன். | ........................................ பெயர் |
| மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பீட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | ........................................ பெயர் ........................................ ஒப்பம் |
| அதிபர் மேற்பார்வை செய்தேன். | |
| வலய / மாகாண மேற்பார்வையாளர் | |

✣ **பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க.**

**01)** நாம் எமது உடலை நோய் வராமல் பாதுகாத்தல் வேண்டும். தினமும் குளித்தல், தோய்த்து உலர்ந்த ஆடைகளை அணிதல், கை கழுவிய பின்னர் சாப்பிடுதல், நகங்களைக் காலத்திற்குக் காலம் வெட்டுதல் போன்ற சிறந்த பழக்கவழக்கங்களை அனுசரித்தல் வேண்டும். குறைவற்ற செல்வமான நோயற்ற வாழ்வை நாம் வாழ்வதற்குச் சுத்தத்தைப் பேணுவோம்.

**கேட்கப்பட்ட வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

i. நோய் வராமல் எமது உடலைப் பாதுகாக்க நாம் தினமும் செய்ய வேண்டியது யாது?

.......................................................................................................................................

ii. குறைவற்ற செல்வமாகக் குறிப்பிடப்படுவது எது?

.......................................................................................................................................

iii. 'மேனி' என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக?

.......................................................................................................................................

iv. 'காலத்திற்குக் காலம்' என்பதைப் பிரித்தெழுதுக.

.......................................................................................................................................

v. தன்மைப் பன்மை எதிர்கால வினைமுற்றைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக?

.......................................................................................................................................

vi. பந்தியில் இடம்பெறும் இணைமொழியை எழுதுக?

.......................................................................................................................................

(6 x 1 = 6 புள்ளிகள்)

**02) வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i. தசரதன் இறந்த ........................................................................ (பதின்னான்காம் / பதினான்காம்) நாள் மந்திரிகள் அரச சபையைக் கூட்டினார்கள்.

ii. தையற்காரர்கள் ........................................................................ (மும்முரமாகத் / மும்மரமாகத்) தைத்துக் கொண்டிருந்தார்கள்.

iii. பண்டைய காலத்து மக்கள் .................................................... (அரிவி / அருவி) வெட்டி முடித்தபின் சிறுதானியங்களை விதைத்தார்கள்.

(3 x 1 = 3 புள்ளிகள்)

**03) கீழுள்ள வினாக்களில் வெற்றிடங்கள் ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந் தெரிவு செய்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

i. பரதனின் கண்களில் இருந்து கண்ணீர் ............................................................ (கசிந்தது / கசிந்தன)

ii. மாற்றுத் தொழினுட்பத்தின் மூலம் பசுமைப் .................................................. உருவாக்க வேண்டும். (புறட்சியை / புரட்சியை)

iii. கிராம மக்களுக்கு நுளம்பு வலைகள் ..................................................................................... (பகிர்ந்தழிக்கப்பட்டன / பகிர்ந்தளிக்கப்பட்டன)

(3 x 1 = 3 புள்ளிகள்)

**04)** **கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களைப் பூரணப்படுத்துக.**

i. பன்றி உறுமும் என்பது போல எருது ..........................................................................................

ii. யானையின் பெண் பிடி என்பது போல குதிரையின் பெண் ..........................................................

(2 x 1 = 2 புள்ளிகள்)

**05)** **மரபுத் தொடரின் கருத்தை எழுதுக.**

அள்ளிக் குவித்தல் ..........................................................................................................................

(1 x1 = 1 புள்ளி)

**06)** **கீழே தரப்பட்டுள்ள சொற்றொடருக்குரிய தனிச்சொல்லை புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**

i. நகையும் பரிகாசமும் பொருந்தக்கவி புனையும் ஆற்றல் படைத்தோன்

.................................................................................................................... (1 x1 = 1 புள்ளி)

**07)** **கீழே கொடுக்கப்பட்ட பழமொழியைப் பூரணப்படுத்துக.**

i. விளையும் பயிரை ................................................................................... (1 x 1 = 1 புள்ளி)

**08)** **கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தில் பொருத்தமான இடங்களில் நிறுத்தக்குறிகளை இடுக.**

i. அண்ணா உனது புத்தகத்தை தருவாயா (1 x 1 = 1 புள்ளி)

**09)** **கீழே தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியத்தை எழுதுக.**

i. பத்திரிகை / இடம் / வெளியிடுவதில் / செய்திகளை / வகிக்கிறது. / பிரதான

..........................................................................................................................................

(1 x 1= 1 புள்ளி)

**10)** i. **கீழே தரப்பட்டுள்ள கவிதையில் உள்ள வெற்றிடத்தைப் பூரணப்படுத்துக.**

நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலகத்தார்

.........................................................................
தீண்ட ஒண்ணாதார்.

ii. **கீழுள்ள கவிதையை வாசித்து, கேட்கப்பட்டுள்ள வினாவுக்குரிய விடையைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**

பேதையான ஒருவனைப்
பெரிய அறிஞன் கண்டனன்
ஓதி உணரச் செய்தனன்
மேதையாக மாற்றினான்.

பேதையை மேதையாக மாற்ற அறிஞன் என்ன செய்தான்?

..........................................................................................................................................

(2 x 1 = 2 புள்ளிகள்)

**11.** **கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு தமிழ்ச் சொல்லிற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.**

i. பாடசாலை ...............................................

ii. வானம் ............................................... (2 x 1 = 2 புள்ளிகள்)

12) **கீழே தரப்பட்டுள்ள ஆங்கில வாக்கியங்களில் உள்ள வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i. Where ............................. (is / are) you going?

ii. I will ............................. (come / coming) tomorrow. (2 x 1 = 2 புள்ளிகள்)

13) **பின்வரும் வாக்கியத்தை ஆங்கிலத்தில் சொல்லப்படும் விதத்தில் ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

i. நான் பாடசாலைக்குச் செல்வேன். ....................................................................................................

(1 x 1 = 1 புள்ளி)

14) **பின்வரும் சிங்களச் சொல்லின் கருத்தை தமிழில் எழுதுக.**

i. ஹெ(ட்)ட நான்ன ........................................................................................ (1 x 1 = 1 புள்ளி)

15) **பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.**

i. விளையாட்டு முற்றம் ...................................................................................... (1 x 1 = 1 புள்ளி)

16) பல்வேறு சூழல் சீர்கேடுகள் காரணமாக நீர்ஊற்றுக்கள் வற்றிப் போதல், ஆறுகள் உலர்ந்து போதல் காரணமாக உணவுப் பயிர்களைப் பயிரிட முடியாத ஒருநிலை ஏற்பட இடமுண்டு. சனத்தொகை அதிகரிப்புடன் நுகரப்படும் நீரின் அளவும் அதிகரித்துள்ளது. இவை யாவும் நீர் தொடர்பாக நாம் எதிர்கொள்ளும் சவால்கள் ஆகும். எனவே "**நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவோம்**". என்னும் தலைப்பில் மூன்று வாக்கியங்களை எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு மேல் இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்களும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

i. ....................................................................................................

....................................................................................................

ii. ....................................................................................................

....................................................................................................

iii. ....................................................................................................

....................................................................................................


(6 புள்ளிகள்)

✧ **கீழே தரப்பட்ட புள்ளிக்கோடுகளில் விடைகளை எழுதுக.**

17) i. 4695 என்னும் எண்ணைச் சொற்களில் எழுதுக. ....................................................

ii. 832இந்த எண்ணின் இலக்கம் 3 இன் இடப்பெறுமானம் யாது? .............................................


(2 புள்ளிகள்)

18) 

i. பூச்சாடியில் உள்ள பூக்களின் எண்ணிக்கையை உரோமன் எண்ணில் எழுதுக. ............................................

ii. பின்வரும் உரோமன் எண்களை இறங்குவரிசையில் எழுதுக.

vi , x , xi , ix, ........................ (2 புள்ளிகள்)


19) 

இந்த உருவில் $\frac{1}{3}$ ஐ பென்சிலால் அல்லது பேனையால் நிறம் தீட்டுக.

(2 புள்ளிகள்)


**20)** டிஜிற்றல் கடிகாரத்தில் காட்டப்பட்டுள்ள நேரத்தை அருகில் உள்ள சாதாரண கடிகார முகத்தில் குறித்துக் காட்டுக.

00 : 45




(2 புள்ளிகள்)

**21)**




i. முழு உருவின் சுற்றளவு யாது? ....................................................

ii. நிறம் தீட்டப்பட்ட உருவின் பரப்பளவு யாது? ..........................................


(2 x 2 = 4 புள்ளிகள்)

**22)** i. 10m நீளமான கம்பி ஒன்றில் இருந்து 50cm, 45cm, 60cm நீளமான மூன்று துண்டுகள் வெட்டி எடுக்கப்பட்டன. மீதியாக உள்ள கம்பியின் நீளத்தை மீற்றர் சென்ரிமீற்றரில் தருக.

............................................................

ii. 3km 50m இதனை மீற்றரில் தருக. ............................................................... (2 புள்ளிகள்)


**23)**



i. முகங்களின் எண்ணிக்கை ..................................

ii. விளிம்புகளின் எண்ணிக்கை ........................... (2 x 1 =2 புள்ளிகள்)

**24)**



i. இவ் உருவிற்கு வரையக்கூடிய சமச்சீர் அச்சுக்களின் எண்ணிக்கை யாது? .......................................................

ii. இவ் உருவைச் சமச்சீராகப் பிரிக்கும் கோட்டினை இவ் உருவில் வரைக. ....................................... (2 x 2 = 4 புள்ளிகள்)

**25)** பாத்திரம் ஒன்றில் 6 லீற்றர் 250 மில்லி லீற்றர் குளிர்பானம் உள்ளது. பிள்ளை ஒன்று ஒவ்வொரு நாளும் 75 மில்லி லீற்றர் பானத்தை வெளியே எடுக்கிறது எனின் பத்து நாட்களின் பின்னர் பாத்திரத்தில் எஞ்சியிருக்கும் குளிர்பானத்தின்அளவு யாது?

............................. லீற்றர் .......................... மில்லி லீற்றர் (2 புள்ளிகள்)

**26)** பிள்ளை ஒன்று A என்னும் இடத்திலிருந்து வடக்குத் திசை நோக்கி 5m தூரம் சென்று அங்கிருந்து தனது வலதுகைப் பக்கத்திற்குத் திரும்பி 5m தூரம் சென்று B என்னும் இடத்தை அடைந்தது. பிள்ளை A என்னும் இடத்திற்கு எத்திசையில் உள்ளது?

.............................................................................................................................. (2 புள்ளிகள்)

**27)** i. *0.1, 0.4, 0.7, ................ , 1.3* இக் கோலம் ஏதோவோர் ஒழுங்குமுறையில் அதிகரித்துச் செல்கிறது. வெற்றிடத்தில் வரவேண்டிய எண்ணை கீழுள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

.......................................


ii. எண்கோலத்தில் அடுத்துவரும் எண்களை எழுதுக.

*2070, 2080, 2090 , ............. , .............* (2 புள்ளிகள்)

**28)** பாடசாலை மாணவர்களுக்கு சத்துணவு வழங்குவதற்காக அரசாங்கம் ஒரு மாணவனுக்கு நாள் ஒன்றிற்கு ரூபாய் 30.00 ஐ வழங்குகிறது. அப்பாடசாலையில் 75 மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள் எனின் நான்கு நாட்களுக்கு அவர்களுக்கு சத்துணவிற்கு கிடைக்கும் பணம் யாது?

.................................................................... (2 புள்ளிகள்)

**29)** ஓர் ஆரம்ப பாடசாலைக்குப் பிள்ளைகள் வரும் வாகனங்கள் பற்றிய தகவல்கள் வரைபில் காணப்படுகின்றன.





i. வானிலும் முச்சக்கர வண்டியிலும் வரும் மாணவர்களின் எண்ணிக்கைகளுக்கிடையே உள்ள வித்தியாசம் யாது? ........................................................

ii. வேறு விதங்களில் வரும் மாணவர்களின் மொத்த எண்ணிக்கை 55 எனக் காணப்பட்டுள்ளது. அந்த எண்ணிக்கையை வரைபில் உரிய நிரலில் குறித்து, நிரலை நிழற்றுக.

(4 புள்ளிகள்)

**30)** **நகரம் ஒன்றில் மூன்று இடங்களுக்கு இடையிலான தூரம் கீழே தரப்பட்டுள்ளது.**




i. A யில் இருந்து பயணத்தை ஆரம்பித்த ஒருவர் பாதை வழியே C யை அடைய அவர் செல்ல வேண்டிய தூரம் எவ்வளவு?




..........................................................................

ii. பாதை A, B இற்கு இடையிலான தூரத்திற்கும் பாதை B, C இற்கு இடையிலான தூரத்திற்குமான வித்தியாசம் யாது? ......................................................................................

(4 புள்ளிகள்)

✧ **31 தொடக்கம் 60 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிந்தெடுத்து அதன் கீழ்க் கோடிடுக.**

**31)** சூரிய நமஸ்காரப் பயிற்சியின் முதல் நான்கு சந்தர்ப்பங்கள் ஒழுங்கின்றித் தரப்பட்டுள்ளன. இவற்றை ஒழுங்குபடுத்தினால் கிடைக்கும் விடை

A  B  C  D 

i. ABCD ii. ACDB iii. ADCB iv. ADBC

**32)** பூ ஒன்றில் காய்கள் காய்க்கும் பகுதி

i. தம்பம் ii. காம்பு iii. சூலகம் iv. கேசரங்கள்

**33)** அனைத்துமுண்ணிப் பிராணி அல்லாதது

i. தவளை ii. பூனை iii. கோழி iv. காகம்

**34)** இலங்கையில் பிரதான துறைமுகம் அமைந்துள்ள இடம்

i. திருகோணமலை ii. காலி iii. கொழும்பு iv. அம்பாந்தோட்டை

**35)** வீட்டு ஈ முட்டையிடுவது

i. மண்ணினுள் ii. சுத்தமான நீரில் iii. அசுத்தமான நீரில் iv. குப்பை கூளங்களில்




**36)** அவசர சந்தர்ப்பங்களின் போது வீதிச் சட்டதிட்டங்களைப் பின்பற்றாமல் ஓடக்கூடிய வாகனம்

i. தொடருந்து ii. குதிரைவண்டி
iii. நோயாளர் காவு வண்டி iv. பாடசாலைப் பேருந்துவண்டி

**37)** இலங்கையின் தேசிய மலராக அல்லி பிரகடனப்படுத்திய தினம்

i. *2016.01.10* ii. *1986.02.26* iii. *1948.02.04* iv. *1972.05.07*

**38)** செயற்பட்டு மகிழ்வோம் செயற்பாடுகளில் கங்காரு போன்று செல்வதைக் காட்டும் படம் எது?

i. 
ii. 
iii. 
iv. 

**39)** இலஞ்ச ஊழல் துஸ்பிரயோகத்திற்கு எதிராக முறைப்பாடு செய்ய அழைக்க வேண்டிய தொலைபேசி எண்

i. 119 ii. 1929 iii. 1987 iv. 1954

**40)** பின்வரும் வித்துக்களில் ஆக்கம் செய்யப் பயன்படாத வித்து எது?

i. பனங்காய் ii. கடல் மாங்காய் iii. றப்பர் iv. ஆல்

**41)** சூரிய கிரகணத்தின் போது

i. புவியின் ஒரு பகுதி அல்லது முழுவதும் தென்படாது
ii. சந்திரனின் ஒரு பகுதி அல்லது முழுவதும் தென்படாது
iii. சூரியனின் ஒரு பகுதி அல்லது முழுவதும் தென்படாது
iv. பூரண சந்திரன் தென்படும்

**42)** இலங்கையின் கிழக்கு மாகாணத்திலும் மேல்மாகாணத்திலும் கடலில் கலக்கும் கங்கைகள் முறையே

i. களுகங்கை, மகாவலி கங்கை
ii. மகாவலி கங்கை, வளவ கங்கை
iii. மகாவலி கங்கை, களனி கங்கை
iv. மாணிக்க கங்கை, மகாவலி கங்கை

**43)** நீரின் மூலம் பரம்பலடையும் வித்துக்களைக் கொண்ட விடையைத் தெரிவு செய்க.

i. தாமரை தேங்காய, கத்தாப்பு, காசித்தும்பை
ii. நீரல்லி, கத்தாப்பு, தேங்காய், கடல் மாங்காய்
iii. வேங்கை, கத்தாப்பு, சமுத்திரக்காய், தாமரை
iv. கத்தாப்பு, போஞ்சி, தாமரை, நீரல்லி

**44)** இலங்கை குடியரசான ஆண்டு எது?

i. *1972* ii. *1948* iii. *1802* iv. *1979*

**45)** வித்தினையும் தண்டுத்துண்டத்தையும் நடுவதன் மூலம் புதிய தாவரத்தைப் பெறக்கூடியது


i. ஈரப்பலா, முருங்கே
ii. பசளி, முருங்கை
iii. கங்குன், மா
iv. மரவள்ளி, கறிவேப்பிலை

**46).** 

இந்த இலச்சினை உணர்த்துவது

i. இப்பக்கம் மேலே
ii. மீள்சுழற்சிக்குட்படுத்தக் கூடியது
iii. பெருந்தெரு
iv. பெருந்தெருக்கள் அபிவிருத்தி அதிகார சபை

**47)** இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவையில் காலநிலை பற்றி, வானிலை ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த அதிகாரி நாளை கடும் மழை பெய்யும் எனக் கூறினார். இங்கு கடும் மழையைக் காட்டும் குறியீடாக அமைவது

i. 
ii. 
iii. 
iv. 

**48)** தாவரங்களில் உணவு தயாரிக்கப்படும் பகுதி

i. இலை ii. வேர் iii. தண்டு iv. காய்

**49)** இலங்கையில் அரசினால் எமக்கு இலவசமாக வழங்கப்படும் சேவைகளில் ஒன்று

i. சுகாதாரம் ii. மின்சாரம் iii. போக்குவரத்து iv. தபால்

**50)** தாவரங்களின் இலைகளால் அழகான கூடு அமைக்கும் பறவை எது?

i. தூக்கணாங் குருவி ii. மழைக்குருவி iii. நெற்குருவி iv. தச்சன் குருவி

**51)** கைக்குட்டை தயாரிக்க மிகப் பொருத்தமான துணி வகை

i. நைலோன் ii. பருத்தி iii. கம்பளி iv. பட்டு

**52)** இலைக்கறி வகைகளை பச்சையாக உண்ணும் விதம் எது?

i. சட்னி ii. ஊறுகாய் iii. பச்சடி iv. வடகம்

**53)** நோய்களில் இருந்து உடலைப் பாதுகாக்கும் உணவு

i. இறைச்சி ii. பால் iii. கருப்பட்டி iv. வல்லாரை


**54)** இரை கொடுத்து இரை பிடிக்கும் முறைகளில் ஒன்று

i. கரப்பு ii. தூண்டில் iii. அத்தாங்கு iv. வீச்சு வலை

**55)** எறும்பிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளும் ஓர் படிப்பினை அல்லாதது

i. ஒற்றுமை ii. சுத்தம்

iii. சிரமப்பட்டு உழைத்தல் iv. உணவுப் பொருட்களைச் சேமித்து வைத்தல்

**56)** 


அருகிலுள்ள வீதிச் சமிக்ஞை விளக்கில் B குறித்து நிற்பது

i. ஆயத்தமாகுக ii. நிறுத்துக

iii. மெதுவாகச் செல்க iv. செல்க

**57)** சரியான கொண்ணிலையில் நடக்கும் ஒருவர் அடியெடுத்து வைக்கும் போது நிலத்தில்பட வேண்டிய பாதத்தின் பகுதிகளை ஒழுங்குமுறையில் காட்டும் விடை

i. விரல் நுனிகள், உள்ளங்கால், குதிக்கால்
ii. குதிக்கால், விரல் நுனிகள், உள்ளங்கால்
iii. உள்ளங்கால், குதிக்கால், விரல் நுனிகள்
iv. குதிக்கால், உள்ளங்கால், விரல் நுனிகள்

**58)** இலங்கையில் நுளம்புகள் காரணமாக கடந்த காலத்தில் பரவிய ஒரு கொள்ளை நோயும், தற்காலத்தில் பரவுகின்ற ஒரு கொள்ளை நோயும் முறையே காட்டுவது

i. பிளேக், நீர்வெறுப்பு ii. டெங்கு, நீர்வெறுப்பு

iii. மலேரியா, டெங்கு iv. மலேரியா, பிளேக்

**59)** வளமற்ற மண்ணுக்குரிய பண்பு

i. மண்புழுக்கள், காணப்படல்
ii. மணலை மாத்திரம் கொண்டிருத்தல்
iii. தாவர விலங்குக் கழிவுகளைக் கொண்டிருத்தல்
iv. ஈரலிப்பும் கறுப்பு நிறமும் கொண்டிருத்தல்

**60)** மண்ணரிப்பு ஏற்படுவதில் பின்வரும் எச்செயல் செல்வாக்குச் செலுத்துகிறது?

i. மூடுபயிர் வளர்த்தல் ii. மண்திட்டுக்களை அமைத்தல்

iii. கல்வேலி அமைத்தல் iv. மரங்களை வெட்டுதல்

(30 x 1 = 30 புள்ளிகள்)

# மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்
# பயிற்சிப் பரீட்சை 04 இன் விடைகள்

**தரம் - 05** **4** **வினாத்தாள் - II**

01. i) குளித்தல் / தோய்த்து உலர்ந்த ஆடைகளை அணிதல் / கை கழுவிய பின்னர் சாப்பிடுதல்
ii) நோயற்ற வாழ்வு iii) உடல் iv) காலத்திற்கு + காலம்
v) பேணுவோம் vi) பழக்கவழக்கங்கள்

02. i) பதினான்காம் ii) மும்முரமாகத் iii) அரிவி

03. i) கசிந்தது
ii) புரட்சியை
iii) பகிர்ந்தளிக்கப்பட்டன
} புள்ளிக்கோட்டின் மீது எழுதி இருப்பின் மாத்திரம் புள்ளி வழங்குக.

04. i) முக்காரமிடும் ii) வடவை / பெட்டை

05. நிறையச் சம்பாதித்தல் 06. விகடகவி 07. முளையில் தெரியும்

08. அண்ணா, உனது புத்தகத்தை தருவாயா?

09. செய்திகளை வெளியிடுவதில் பத்திரிகை பிரதான இடம் வகிக்கிறது.

10. i) செய்யவரே - அண்டித் தின்மை ii) ஓதி உணரச் செய்தான்

11. i) School ii) Sky

12. i) are ii) Come

13. i) I will go to school

14. நாளை குளிக்கவும் 15. செல்லம் மிதுல

16. பொருத்தமான வாக்கியங்கள் எழுதியிருப்பின் புள்ளி வழங்குக.

17. i) நான்காயிரத்து அறுநூற்று தொண்ணூற்றைந்து ii) பத்துக்கள்

18. i) vi ii) xi, x, ix, vi


19. நான்கு சிறிய கட்டங்களுக்கு நிறந் தீட்டியிருப்பின் புள்ளி வழங்குக.

20. நேரம் 12. 45 மணியை சரியாகக் குறித்திருப்பின் புள்ளி வழங்குக.

21. i) 16cm ii) $8cm^2$ / 8 சதுரசென்ரிமீற்றர் 22. i) 8m 45cm ii) 3050m

23. i) 4 ii) 6

24. i) 1 ii)



25. 5 லீற்றர் 500 மில்லி லீற்றர்

26. வடகிழக்குத் திசையில் 27. i) 1.0 / 1 ii) 2100, 2110

28. ரூபாய் 9000.00 29. i) 15 ii) வரைபில் குறித்துக் காட்டுக.

30. i) 12km 120m ii) 2km 20m

31. ii 32. iii 33. i 34. iii

35. iv 36. iii

37. i 38. ii 39. iv 40. iv

41. iii 42. iii 43. ii 44. i

45. ii 46. iii 47. iii 48. i

49. i 50. iv 51. ii 52. iii

53. iv 54. ii 55. ii 56. i

57. iv 58. iii 59. ii 60. iv